நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : தொடக்கநிலை

## Level : Basic

***December 2011***

வினாக்கள் : 40

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

ஆசிரியர் வாசிப்பதற்கான நேரம் : 15 நிமிடங்கள்

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

- முழு வினாத்தாளும் முதல் 15 நிமிடங்களில் **மட்டுமே** வாசிக்கப்பட வேண்டும்.
- வாசித்த பின்னர் வேறு உதவிகள் வழங்கப்படக் கூடாது.
- வாசிக்கப்படும் நேரத்தில் மாணவர்கள் வினாத்தாளிலோ அல்லது விடைத்தாளிலோ எந்த விதமான அடையாளங்களையும் இடக்கூடாது.

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

For questions 1 to 3, choose the word(s) that best describe the action shown in the picture.

1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லை (சொற்களை) தெரிவு செய்க.



1. இந்தச் சிறுவன்

(a) நடக்கிறான்.

(b) நிற்கிறான்.

(c) ஓடுகிறான்.

(d) பாட்டு கேட்டுக்கொண்டு ஓடுகிறான்.




2. இந்தச் சிறுமிகள்

(a) குதிக்கிறார்கள்.

(b) ஆடுகிறார்கள்.

(c) விளையாடுகிறார்கள்.

(d) பாடுகிறார்கள்.



3. இந்தக் கங்காரு

(a) தூங்குகிறது.

(b) உட்கார்ந்து இருக்கிறது.

(c) குளிக்கிறது.

(d) நீர் அருந்துகிறது.

Read and understand the Poem “வீடு” and answer the questions 4 to 7.
“வீடு” என்ற பாடலை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 4 முதல் 7 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.



## வாழைமரம்

வாழைமரம் வாழைமரம்
வழவழப்பாய் இருக்கும் மரம்

சீப்பு சீப்பாய் வாழைப்பழம்
தின்ன தின்னக் கொடுக்கும் மரம்

பந்தி வைக்க இலைகள் எல்லாம்
தந்திடுமாம் அந்த மரம்

காயும் பூவும் தண்டுகளும்
கறிசமைக்க உதவும் மரம்

கலியாண வாசலிலே
கட்டாயம் நிற்கும் மரம்

| | |
|---|---|
| 4. பாடலில் அதிகம் சொல்லப்படும் விடயம்?<br>(a) வாழைப்பழம்<br>(b) வாழைத்தண்டு<br>(c) வாழை மரம்<br>(d) வாழை இலை | 5. எதில் பந்தி வைக்கலாம்?<br>(a) பணம்<br>(b) சாப்பாடு<br>(c) மரத்தில்<br>(d) வாழை இலையில் |
| 6. கறி சமைக்க உதவுபவை எவை?<br>(a) வாழைக் காய்<br>(b) வாழைப் பூ<br>(c) வாழைத் தண்டு<br>(d) மேற்சொன்ன மூன்றுமே | 7. வழ வழப்பாய் இருக்கும் மரம் எந்த வாசலில் நிற்கும்?<br>(a) கட்டாயம் நிற்கும<br>(b) வீட்டு வாசலில் நிற்கும்<br>(c) தோட்டத்தில் நிற்கும்<br>(d) கல்யாண வாசலில் நிற்கும் |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 8 and 9 choose the word that is spelt incorrectly in the given sentence.
8 ஆம், 9ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட வசனத்திலே பிழையாக எழுதப்பட்டுள்ள சொல்லினைக் காட்டுக.

8. செம்மொழியான தமில் மொழியாம்.

(a) செம்மொளி
(b) தமிழ்
(c) மொலி
(d) மௌலி

9. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வலரும்.

(a) ஊறார்
(b) பில்லை
(c) வளரும்
(d) என் பிள்ளை

For questions 10 and 11 choose the correct spelling of the underlined word that is spelt incorrectly in the given sentence.
10ஆம், 11ஆம் கேள்விகளில் பிழையான ஒரு சொல் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. அதற்குரிய சரியான சொல் எது?

10. <u>முயட்சி</u> உடையார் இகழ்ச்சி அடையார்.

(a) முயற்சி
(b) முயற்ச்சி
(c) முயல்
(d) முயல்சி

11. நீங்க என்ன <u>சொல்று</u>?

(a) சொல்கிறாய்
(b) சொல்லுவாய்
(c) சொல்கிறீர்கள்
(d) சொல்வீர்கள்

Look at the pictures carefully and choose the most approprate answer to the questions 12 to 15.

படங்களைக் கவனமாகப் பார்த்து 12 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.




12. இந்தப் படத்தில் இருப்பவர்

(a) சாப்பிடுகிறார்

(b) சோளம் தின்கிறார்

(c) சோளத்தை சுவைத்து சாப்பிடுகிறார்

(d) சிரிக்கிறார்




13. இந்த விரல்கள் விசைப்பலகையினை

(a) தொடுகின்றன

(b) தட்டுகின்றன

(c) விளையாடுகின்றன

(d) தட்டுது



14. இச் சிறுமிகள்

(a) சதுரங்கம் பார்க்கிறார்கள்

(b) சதுரங்கம் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள்

(c) தாயம் விளையாடுகிறார்கள்

(d) கவலையோடு உள்ளார்கள்



15. இப்படத்தில் உள்ள இருவரும்

(a) நண்பர்கள்

(b) தாயும் மகளும்

(c) ஆசிரியரும் மாணவியும்

(d) வகுப்பறை தோழிகள்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 16 to 21 choose the best answer.
16 முதல் 21 வரையுள்ள வினாக்களில் ஒவ்வொரு இடைவெளிக்கும் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

16. நாங்கள் தமிழ் பள்ளியில் தமிழ் படித்து ________________________________

(a) வரோம்

(b) வருகின்றோம்

(c) பார்போம்

(d) தூங்குகின்றோம்

17. அப்பா அம்மா __________________________ கடைக்குச் சென்று உள்ளார்கள்.

(a) இருவரும்

(b) இறுவரும்

(c) ரெண்டு பேரும்

(d) நால்வரும்

18. மாம்பழம் எனக்கு மிகவும் __________________________ .

(a) பிடிக்கும்

(b) இனிக்கும்

(c) பிடிக்காது

(d) விருப்பம்

19. இப்பொழுது நான் தேர்வு __________________________ .

(a) எழுதுகிறேன்

(b) எழுதுவேன்

(c) எழுதினேன்

(d) எழுதிக்கொண்டு இருக்கின்றேன்

20. திவ்யா தன் தங்கையின் உடைகளை அணிய _______________________ .

(a) உதவினோம்

(b) உதவினேன்

(c) உதவினாள்

(d) உதவினான்

21. அம்மா "இன்று மாலை கோவிலுக்கு ________________________" என்று அகிலன் கேட்டான்.

(a) செல்வோமா

(b) செல்வோமா?

(c) செல்வோம்

(d) போவோம்

For questions 22 to 24 choose the word(s) that has (have) the closest meaning to the underlined word(s).

22 முதல் 24 வரை கோடிட்ட சொல்லுக்கு (சொற்களுக்கு) மிகப் பொருத்தமான சொல் (சொற்களை) தருக.

22. இல்லத்தை ஆள்பவள் <u>இல்லாள்.</u>

(a) மனைவி

(b) மாணவி

(c) இல்லாதவள்

(d) மகள்

23. மணிச் <u>சத்தம்</u> கேட்டது.

(a) விசை

(b) பசை

(c) ஓசை

(d) இசை

24. மலர் <u>மலர்ந்தது.</u>

(a) விரிந்தது
(b) உதித்தது
(c) பூத்தது
(d) வந்தது

For questions 25 to 27 give the opposites to the underlined words.
25 முதல் 27 வரை கோடிட்ட சொல்லுக்கு எதிர்ச்சொல் தருக.

25. மழை நீர் <u>பள்ளத்தை</u> நோக்கி ஓடியது.

(a) வெள்ளத்தை
(b) உள்ளத்தை
(c) மேட்டை
(d) வேட்டை

26. கபிலன், "வாருங்கள் <u>உள்ளே</u> வாருங்கள்" என அழைத்தான்.

(a) அருகே
(b) வெளியே
(c) தனியே
(d) இங்கே

27. <u>பழையன</u> கழிதலும் புதியன புகுதலும்

(a) புதியன
(b) கழிந்தன
(c) புகுந்தன
(d) வந்தன

Read and understand the text "தமிழ் காப்பியங்கள்" and answer the questions 28 to 31.
"தமிழ் காப்பியங்கள்" பற்றிய குறிப்புகளை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 28 முதல் 31 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

# தமிழ் காப்பியங்கள்

வாழ்கையில் நடந்த அனைத்து சம்பவங்களையும் கதையாக செய்யுள் நடையில் (பாடல் வடிவில்) தருவது காப்பியம் ஆகும்

தமிழில் முதன் முதலாக சிலப்பதிகாரமும் , மணிமேகலையும் காப்பியங்களாக தோன்றின .அதன் பின்னர் தோன்றிய காப்பியங்களை இணைத்து ஐம்பெரும் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் எனப் புலவர்கள் பிரித்து தந்தனர்

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி இவை ஐம்பெரும் காப்பியங்கள் ஆகும்

சூளாமணி , நீலகேசி , உதயண குமார காவியம் , யசோதர காவியம் ,நாக குமார காவியம் ஆகியன ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகும்.

28. காப்பியம் என்றால் என்ன?

(a) சம்பவங்கள்

(b) கதை

(c) செய்யுள் நடை

(d) மேற்சொன்ன மூன்றின் கலவை

29. தமிழ் மொழியின் முதல் இரண்டு காப்பியங்கள் யாவை?

(a) சிலப்பதிகாரமும், வளையாபதியும்

(b) சிலப்பதிகாரமும், குண்டலகேசியும்

(c) சிலப்பதிகாரமும், மணிமேகலையும்

(d) வளையாபதியும், மணிமேகலையும்

30. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று எது?

(a) சிலையாபதி

(b) வளையாகேசி

(c) சீவகசிந்தாமணி

(d) மணிமாகலை

31. ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று எது?

(a) சிலப்பதிகாரம்,

(b) மணிமேகலை,

(c) சீவகசிந்தாமணி

(d) சூளாமணி

For questions 32 to 34 rearrange the sentences in order.
32 முதல் 34 வரையுள்ள கேள்விகளுக்கு தரப்பட்ட வசனங்களை சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.

32. 1. காலை எழுந்தவுடன் படிப்பு
2. மாலை முழுதும் விளையாட்டு
3. பின்பு கனிவு தரும் நல்ல பாட்டு
4. பழக்கப்படுத்திக் கொள்ளடி பாப்பா

(a) (1), (4), (3), (2)    (b) (4), (1), (3), (2)
(c) (1), (3), (2), (4)    (d) (1), (4), (2), (3)

33. 1. நான் வீட்டுப் பாடம் செய்ய
2. முடித்த பின் விளையாடினேன்.
3. புத்தகம் எடுத்து படித்தேன்.
4. வீட்டுப் பாடம் செய்து முடித்தேன்.

(a) (1), (4), (3), (2)    (b) (1), (3), (4), (2)
(c) (1), (3) , (2), (4)    (d) (1), (4), (2), (3)

34. 1. சாப்பாட்டு தட்டுகளை எடுத்தேன்
2. என் அம்மா சாப்பிட அழைத்தார்
3. நான் கைகளை கழுவி
4. அம்மா உணவு பரிமாறினார்கள்

(a) (1), (4), (3), (2)    (b) (1), (3), (4), (2)
(c) (1), (3), (2), (4)    (d) (2), (3), (1), (4)

Read the text and answer the questions 35 to 37.
பின்வரும் பந்தியை வாசித்து 35 முதல் 37 வரையான வினாக்களுக்கு விடை தருக.

## தமிழ் மொழி

தமிழ் மொழி இனிமையான மொழி. தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்று பொருள். இனிமை, பெருமை, உயர்வு கருதி மொழி அறிஞர்கள் உயர்தனிச் செம்மொழி எனப் பாராட்டுவர்.

தமிழ் மொழியின் உயர்விற்கு அதன் பழமையும் காரணம். தமிழ் மொழி பல ஆயிரம் ஆண்டுகள் பழமை உடையது. தமிழ் மொழிக்கென தனியான பல சிறப்புகள் உண்டு. தமிழ் மொழியில் சில சிறப்பு எழுத்துக்கள் உள்ளன. வேறு மொழிகளில் இந்த சிறப்பு எழுத்துக்களின் ஒலி கூட இல்லை. ழ, ற ன ஆகியன தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்கள் ஆகும்.

35. தமிழ் மொழியின் உயர்விற்கு காரணம் அதன்
   (a) புதுமை
   (b) உரிமை
   (c) கடமை
   (d) பழமை

36. தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்கள்
   (a) அ, ஆ, இ
   (b) ழ, ற, ன
   (c) ண, ன, ந
   (d) ∴, ஔ, கௌ

37. மொழி அறிஞர்கள் தமிழ் மொழியை இப்படி பாராட்டுவர்
   (a) இனிமையான மொழி
   (b) பெருமையான மொழி
   (c) செம்மொழி
   (d) பழமையான மொழி

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 38 to 40 on “ஆலயம் தொழுவது சாலவும் நன்று” choose the right answer.

38 முதல் 40 வரையுள்ள “ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்ற கொன்றை வேந்தன் பற்றிய வினாக்களுக்கு மிகவும் சரியான பதிலைத் தெரிவு செய்க.

| ஆலயம் தொழுவது சாலவும் நன்று |
|---|

38. ஆலயம் என்ற சொல்லை குறிக்கும் இன்னோர் சொல் எது?
    (a) வீடு
    (b) பள்ளிக்கூடம்
    (c) கோயில்
    (d) மடம்

39. பின் வரும் சொற்களில் எது “நன்று” என்பதை குறிப்பிட மாட்டாது.
    (a) நல்லது
    (b) சிறப்பு
    (c) நல்ல பழக்கம்
    (d) தீது

40. இதன் கருத்து:
    (a) ஆலயம் செல்வது மிகவும் அவசியம்.
    (b) ஆலயம் தொழுவது நல்ல தொந்தரவு.
    (c) கோவிலுக்கு சென்று வணங்குவது மிகவும் நல்லது.
    (d) கோவிலுக்கு வாங்க போகலாம்.